
# உடன்பிறப்பே... 69

நீரை.மகேந்திரன்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ஆ.கருப்பையா அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

ஓவியம் : ரவி பேலட்



# ஆ.கருப்பையா:

## அண்ணல் சிலை அமைத்த தீரர்!

1967-ஆம் ஆண்டு விருகம்பாக்கம் தேர்தல் சிறப்பு மாநாடு, கழகம் எதிர்கொண்ட மூன்றாவது பொதுத் தேர்தலுக்கு கழகத்தினரைத் தயார்ப் படுத்தியது. அந்த மாநாட்டில் தான் சைதாப்பேட்டை தொகுதிக்கு 'திரு.பதினோரு லட்சம்' என கலைஞரை வேட் பாளராக அறிவித்தார், பேரறிஞர் அண்ணா.

அப்போது பேரறிஞர் அண்ணா அறிவித்த வேட்பாளர்கள் பட்டியலில், கங்கை கொண்டான் தொகுதியின் வேட்பாள ராக அறிவிக்கப்பட்ட பேறு பெற்றவர் ஆ.கருப்பையா. 'கங்கைகொண்டான் கருப்பையா'... 'வெள்ளை உள்ளமும், பிள்ளை மனமும் கொண்ட பேராளர்' என கழகத்தலைவர் கலைஞரால் அன்பு பாராட்டப்பட்ட பண்பாளர்.

கழகத்தில், கலைஞரின் பெரும் சாதனைகளில் ஒன்றாக அண்ணல் அம்பேத்கர் சிந்தனைகள், சிலைகள், அவர் பெயரால் கல்லூரி, சட்டப் பல்கலைக்கழகம் என அடுத்தடுத்து அவர் புகழையும் பெயரையும் தமிழ்நாடு முழுவதும் கொண்டு சேர்த்த நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

அந்த வகையில், தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் முதல்முறையாக நெல்லையில் சட்டமேதை அண்ணல் அம்பேத்கரின் சிலை அமைக்கப்பட்டு, அந்தச் சிலையைத் தனது கைகளால் திறந்து வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தச் சிலை திறப்பதற்கு அரும்பாடுபட்டவர் ஆ.கருப்பையா. கழகம் எடுத்த பெருமுயற்சிக்கு இவர் மூலமாகக் கிடைத்த வெற்றி என்பதால், அந்த விழா இவர் தலைமையில்தான் நடந்தது.

### அக்ரகாரத்தில் ஊர்வலம்

சாதி இறுக்கங்களுக்கு எதிராக, திராவிட முழக்கத்தை, கழகத்தின் சமத்துவ, சமூகநீதியை உயர்த்திப் பிடித்து, அரசியல் செய்த தீரர். தந்தை பெரியாரின் மாணவர்.

1927-ஆம் ஆண்டு மே 30 அன்று பிறந்தவர் கருப்பையா. பெற்றோர் ஆழ்வார் கங்காணி-தாயார் அரசு அம்மையார். பெற்றோருக்கு ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்த கருப்பையா, படிப்பும், கேள்விஞானமும் கொண்ட ஆற்றல் மிகுந்த பிள்ளையாக வளர்ந்தவர். அந்த இயல்பு தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சிந்தனை, பகுத்தறிவு இயக்கம் ஆகியவற்றை நோக்கி, நகர்த்திக் கொண்டு சென்றது.

'சுதந்திரம் கிடைத்ததற்குப் பின்னரும், தாழ்த்தப்பட்ட மக்கள், உயர்சாதிக்காரர்கள் வசிக்கும் தெருவில் நடக்கக்கூடாது என்கிற நிலை இருக்கிறது' என தந்தை பெரியாரின் நெருப்புப் பொறி பறக்கும் பிரச்சாரத்தை கங்கைகொண்டான் கிராமத்துக்குக் கொண்டு சென்றவர் கருப்பையா. பெரியார் உருவாக்கிய எழுச்சியில், தாழ்த்தப்பட்ட மக்களை அணி திரட்டி, அக்ரகாரத் தெரு வழியாக ஊர்வலமாக அழைத்துக் கொண்டு சென்றார். அதற்காக அவர் பெற்ற தாக்குதல்கள், வழக்குகள் அவரை மேலும் உரமேற்றுவதாகவே அமைந்தன.

### கிளைக் கழகம் தொடக்கம்

கழகம் தொடங்கப்பட்ட காலத்தில், பலரும் பேரறிஞர் அண்ணாவைத் தொடர்ந்தாலும், கருப்பையா போன்றோர் திராவிடர் கழகத்தில் நீடித்தனர். ஆனாலும், அரசியல் கட்சியின் தேவையை அறிந்த கருப்பையா, 1952-ஆம் ஆண்டில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். "என்னால் பொது மனிதனாக இருக்க முடியவில்லை" என அப்போது குறிப்பிட்டுள்ளார்.

1952- ஆம் ஆண்டில் கழகத்தில் இணைந்த கருப்பையா அவர்கள், 1953-ஆம் ஆண்டில் கங்கைகொண்டானில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அங்கு முதன்முறையாக கழகக் கொடியைப் பறக்கவிட்டார். கிளைக் கழகத்தின் செயலாளர் என, அதிகாரத்தை நோக்கிய வளர்ச்சிக்கு அடித்தட்டு மக்களையும் தயார்ப்படுத்தத் தொடங்கினார்.

1955-ஆம் ஆண்டு கங்கைகொண்டான் பஞ்சாயத்து வார்டு உறுப்பினராகவும், அதே காலகட்டத்தில் கங்கைகொண்டான் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் கழகத்தின் ஆதரவுடன் பொறுப்பேற்று, அந்தப் பகுதி விவசாயிகளின் நன்மதிப்பைப் பெற்றார்.

அன்றைய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழகத்தின் கொள்கை விளக்க மேடைகளில் கருப்பையாவின் பேச்சு அனல் பறக்கின்ற தீப்பொறியாக இருக்கும். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போர், இலங்கைத் தமிழர் போராட்டம், ரயில் மறியல் போர் என தலைமைக் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறைசென்றவர். மாவட்டக் கழகம் முன்னெடுக்கும் போராட்டங்களிலும் கருப்பையா முன்னணியில் நின்றவர்.

**மிசா நெருக்கடிகள், எம்.ஜி.ஆர் ஆட்சிக் கால நெருக்கடிகள் என சோதனையான காலகட்டங்களில், கலைஞரின் நம்பிக்கைக்குரிய உடன்பிறப்பாக நெல்லை வட்டாரத்தில் நின்று, கழகப் பணியாற்றியவர் கருப்பையா.**

### வேறுபாடுகள் பார்க்காத பணி

1965-ஆம் ஆண்டு, கங்கைகொண்டான் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு கருப்பையா போட்டியிட்டார். இவரை எதிர்த்து, ஆதிக்க சமுதாயத்தைச் சேர்ந்த மைனர் சங்கர் அய்யர் என்பவர் போட்டி யிட்டார். சாதிச் செல்வாக்கு, பொருளாதாரச் செல்வாக்குக் கொண்ட அவரை, மக்கள் செல்வாக்கும், கழகத்தின் வழிகாட்டலும் கொண்ட கருப்பையா தோற்கடித்தார் என்பது வரலாறு.

இவர் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தபோது, சாதி, சமுதாய வேறுபாடு பார்க்காமல் அனைத்துச் சாதியினருக்குமான பஞ்சாயத்துத் தலைவராகத் தனது செயல்பாடுகளைக் கொண்டிருந்தார் என்பதால், சிறந்த பஞ்சாயத்துத் தலைவர் என குடியரசுத் தலைவரிடம் விருது பெற்றார். சுயமரியாதைச் சிந்தனையும் , சமூகநீதிக் கண்ணோட்டமும் அவரை எந்த நாளும் இயக்கிக்கொண்டிருந்தன என்பதற்கு, அந்த சம்பவத்தைச் சான்றாகச் சொல்கின்றனர் கழகத்தினர்.

### 60 சதவிகித வாக்குகள்

1967-ஆம் ஆண்டில் கழகத்தின் வேட்பாளராக கங்கைகொண்டான் தொகுதியில் போட்டியிட்டு 60 சதவிகித வாக்குகள் பெற்று மாபெரும் வெற்றிகண்டவர் கருப்பையா. பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், கலைஞரிடமும் மாறா கழகப் பற்றுடன் பயணித்தவர். 1971-ஆம் ஆண்டில் மீண்டும் கங்கைகொண்டான் தொகுதியில் போட்டியிட்டு, அதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தலில் பெற்ற வாக்குகளைப் போலவே, அதே அளவு வாக்குச் சதவிகிதத்தைத் தக்க வைத்திருந்தார்.

1970-ஆம் ஆண்டில், கலைஞர் ஆட்சிக் காலத்தில், சங்கரன்கோவில் அருகே, தனது தொகுதிக்குட்பட்ட பகுதியான வள்ளிக் கோனேந்தல் எனும் பகுதிக்கு கல்லூரி வேண்டும் என கோரிக்கை வைத்தார். அதை ஏற்று கலைஞர் அந்தப் பகுதிக்குக் கல்லூரி அறிவித்து, அந்தப் பகுதியில் கொண்டுவரப்பட்ட முதல் அரசுக் கல்லூரியாகப் பெயர் பெற்றது. அதற்கு முத்துராமலிங்க தேவர் பெயர் சூட்டப்பட்டது.

தென்மாவட்ட மக்களிடம் சாதி இறுக்கத்தைக் குறைத்து, இணக்கத்தை உருவாக்கும் வகையில் செயல்பட்ட கருப்பையா, நெல்லையில் அண்ணல் சிலை அமைக்கும் பணியை முன்னின்று நடத்தினார். அந்தச் சிலையை கலைஞர் திறந்து வைத்து கருப்பையா அவர்களின் மகத்தான மக்கள் பணியைப் பாராட்டினார்.

### கலைஞர் விருது

மிசா நெருக்கடிகள், எம்.ஜி.ஆர். ஆட்சிக் கால நெருக்கடிகள் என சோதனையான காலகட்டங்களில், கலைஞரின் நம்பிக்கைக்குரிய உடன்பிறப்பாக நெல்லை வட்டாரத்தில் நின்று, கழகப் பணியாற்றியவர் கருப்பையா. கலைஞரின் அன்புக்குரிய அந்த உடன்பிறப்புக்கு 2005-ஆம் ஆண்டில் கழகத்தின் முப்பெரும்விழா விருதுகளில் **'கலைஞர் விருது'** அறிவிக்கப்பட்டது. அந்த விருதினைத் தனது கைகளால் அளித்து மகிழ்ந்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

வயது மூப்புக் காரணமாக 2013-ஆம் ஆண்டு, டிசம்பர் 17-ஆம் தேதி தனது 81-வது வயதில் இயக்கத்தை நிறுத்திக் கொண்ட அவருக்கு, மாவட்டக் கழகமே திரண்டு வந்து இறுதி மரியாதை செய்தது. அண்ணா காலத்து மூத்த அரசியல்வாதி என பத்திரிகைகள் புகழாரம் சூட்டியிருந்தன. பேரறிஞர் அண்ணாவின் தம்பி, முத்தமிழறிஞர் கலைஞரின் அன்பு உடன்பிறப்பு என காலம் எழுதி வைத்துள்ளது. கழகம் மறக்காது.

**...துடிக்கும்**

## பேரிடர் கால மனிதம்!



கேரள மாநிலம், வயநாட்டில் ஏற்பட்ட மலைச்சரிவும், மனித உயிரிழப்புகளும் அங்கு இதுவரை இல்லாத துயரத்தை ஏற்படுத்தியுள்ளன. மீட்புப் பணிகள் துரிதமாக நடந்துவரும் நிலையில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குப் பலரும் நிதி உதவிகளை அளித்து வருகின்றனர்.

வயநாட்டில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகள், பலவிதமாக உள்ள நிலையில், அன்னையரை இழந்து, மீட்கப்பட்டு முகாம்களில் உள்ள பிஞ்சுக் குழந்தைகளைப் பராமரிக்கவும், குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டவும் தயாராக உள்ளதாக இடுக்கி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருவர், தனது கணவரின் செல்போன் எண்ணுடன் சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார். நான்கு வயதில் ஒரு குழந்தையும், நான்கு மாத கைக் குழந்தையும் உள்ள தனக்கு, பிஞ்சுக் குழந்தைகளின் தேவையை அறிந்து, பராமரிக்க முடியும் என்பதால், இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அவரது கணவர் ஓட்டுநராக வேலை பார்க்கிறார் என்றும், தங்களால், பொருளாதார ரீதியாக உதவ முடியவில்லை என்றாலும், குழந்தைப் பராமரிப்பில் உதவமுடியும் என குடும்பத்துடன் வயநாடு முகாம்களுக்குச் சென்றுள்ளார்.

கேரளத் துயரச் சம்பவத்தில் அந்த மாநில மக்கள் அனைவருமே பங்கெடுத்துள்ள நிலையில், இடுக்கி பெண்ணின் முடிவினை சமூக வலைதளங்களில் பலரும் பாராட்டி வருகின்றனர்.

பேரிடர் காலத்தில் சுரக்கும் மனிதம், தாய்ப்பாலுக்கு இணையானது என்பார்கள். பேரிடரில் மீண்ட குழந்தைகளுக்குத் தாய்ப்பாலையே அளிக்க முன்வந்த பெண் பாராட்டப்பட வேண்டியவர்.

## :ப்ளாஷ்பேக்



நா.கிருஷ்ணன்



'முரசொலி'யில் படம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் பார்த்து, அவருடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது, என்னுடைய நீண்ட நாள் ஆசை. நான் ஆசிரியராக இருந்து பணி ஓய்வுபெற்ற பின், அந்த ஆசை எனக்கு 2015-ஆம் ஆண்டு மார்ச் 9 அன்று கோபாலபுரம் இல்லத்தில் நிறைவேறியது. நானும் என் இணையர் சுமதி அவர்களும் நேரில் சென்று கலைஞரைச் சந்தித்து, அவருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டோம். அது எனக்குக் கிடைத்த மாபெரும் பேறு. மேலும், எனது புகைப்படம் 2015 மார்ச் 12 அன்று 'முரசொலி' பத்திரிகையிலும் வந்திருந்தது. அதைக் கண்டதும் இன்னும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

**– நா.கிருஷ்ணன், வட்ட அவைத் தலைவர், திருவப்பூர், புதுக்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சொத்துரிமைச் சட்டம்!

1989-ஆம் ஆண்டு, மே மாதம் 6- ஆம் தேதி, ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கும் அனைத்துவிதங்களிலும் சமஉரிமைகள் வழங்கும் சொத்துரிமைச் சட்டத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்தார், முத்தமிழறிஞர் கலைஞர். அந்தச் சட்டத்தின் மூலம், நாட்டிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில்தான் பெண்களுக்குச் சொத்துரிமையை உறுதி செய்தார் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

558

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131